8.6 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் பூர்வாங்க முடிவின் பிரகாரம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குட்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கு ஏற்புடைய ரசீதுடன் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டு ஏற்புடையதாயின் மாத்திரம் திணைக்களத் தலைவரின் சிபாரிசுடன் உரிய முறையில் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்ட உடன் அது பற்றிக் குறிப்பிட்டு பரீட்சைத் திணைக்களத்தினால் அறிவித்தல் ஒன்று வெளியிடப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நடைபெறும் திகதிக்கு ஆகக்குறைந்தது ஐந்து தினங்களுக்கு முன்பேனும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு இணங்க அதுபற்றி பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவில் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும்போது தாங்கள் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் தங்களது முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைச் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். கொழும்புக்கு வெளியிலுள்ள ஒரு பிரதேசத்தில் வசிப்பவராயின் மேலுள்ள தகவல்களுடன் தங்களுக்கு அனுமதி அட்டையை அனுப்புவதற்குத் தொலைநகல் (பெக்ஸ்) இலக்கமொன்றையும் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதம் ஒன்றைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு தொலைநகல் மூலம் அனுப்பி வைப்பது சாலச்சிறந்ததாகும். அவ்வாறு வினவும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்தும் பொருட்டு தங்கள் வசம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய ரசீதின் பிரதி மற்றும் விண்ணப்பத்தைப் பதிவுத்தபாலில் அனுப்பியதற்கான சிட்டை என்பவற்றைத் தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

8.7 விண்ணப்பதாரியொருவர் தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய சுட்டிலக்கத்தின்கீழ் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அத்தோடு பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளன்று பரீட்சை நிலைய அதிபருக்கு தனது கையொப்பத்தை உறுதிசெய்த அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திக்கு இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

9. **பரீட்சார்த்தியின் அடையாளம்**.- பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை நிரூபிக்க பின்வரும் ஆவணங்களில் ஒன்றைப் பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் :

(i) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்படும் தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்).

10. **பிழையான தகவல்கள் வழங்குதல்**.- விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய தகைமைகள் உள்ளனவா எனப் பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் பிழையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது தெரியவரும் பட்சத்தில் அவர்களது பரீட்சார்த்த தகைமை இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பிழையான அல்லது பொய்யான தகவலொன்று நியமனம் பெற்ற பின்னர் தெரியவருமிடத்து அதற்கு ஏற்புடைய நடவடிக்கைகளுக்கு அமைவாக பதவி நீக்கம் செய்யப்படும்.

11. இந்தப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதோடு, பரீட்சை நடாத்தல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டுள்ளனர். அவ்வாறான சட்டவிதிமுறைகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாதல் வேண்டும்.

நியமனம் வழங்குதல் மற்றும் ஏனைய சகல விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளருக்கு உரியது.

**குறிப்பு**.- இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தல்களில் ஏதேனும் முரண்பாடுகள் எழுமிடத்து சிங்கள மொழியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலே மேலோங்கும் என்பதைக் கவனத்திற்கொள்க.

சந்திரானி சேனாரத்ன,
செயலாளர்.
மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு,

5 ஆம் மாடி,
'செத்சிறிபாய' II ஆம் கட்டம்,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் வெளிக்கள/ அலுவலகப் பிரிவு சேவை வகுதி 2 உளவளத்துணை உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்க்கும் திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2017)**

Open Competitive Examination For Recruitment For Counseling Officers, Grade II in Field/Office Based Officer - Segment 2 to the Ministry of Woman and Child Affairs - 2016 (2017)

பரீட்சைக்குத் தோற்றும் ஊடக மொழி :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டிற்குள் எழுதுக.)

01. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் வரும் பெயரை முதலில் குறிப்பிட்டு அடுத்ததாக முதலெழுத்துக்களைக் குறிப்பிடுக (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

1.5 பால் நிலை :
பெண் - 1
ஆண் - 0

(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டிற்குள் எழுதுக.

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.
2.3 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.4 தொலைபேசி இலக்கம் :----.

3. 3.1 விவாகமானவரா/ விவாகமாகாதவரா ? :
விவாகமானவர்-1, விவாகமாகாதவர்-2

(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டிற்குள் எழுதுக.

3.2 பிறந்த திகதி :

ஆண்டு    மாதம்    திகதி

3.3 விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள்    மாதங்கள்    நாட்கள்

3.4 தாங்கள் இலங்கைப் பிரசையாவது பிறப்பினாலா ? :----.
பதிவின் மூலமா ? :----.

4. 4.1 கல்வித் தகைமைகள் :

| பல்கலைக்கழகம் | பெற்றுள்ள பட்டம் | பட்டம் செல்லுபடியாகும் திகதி | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

4.2 வேறு தகைமைகள் :
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------

4.3 அனுபவம் :
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------

5. தாங்கள் ஏதேனும் குற்றத்திற்கு நீதிமன்றமொன்றினால் குற்றம்சாட்டப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டுள்ளீரா ? :----.
அவ்வாறு தண்டனை பெற்றிருப்பின் எவ்வாறான குற்றத்திற்கு எந்த நீதிமன்றத்தினால் எத்தகைய தண்டனை வழங்கப்பட்டது என்பது தொடர்பாக குறிப்பிடுக :----.

6. பரீட்சைக் கட்டணம் செலுத்திய ரசீது தொடர்பான விபரம் :
(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட தபாலகத்தின் பெயர் :----.
(ii) ரசீது இலக்கம் மற்றும் திகதி :
இலக்கம் :----.    திகதி :----.
(iii) செலுத்திய தொகை :----.

ரசீது கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும்.

7. விண்ணப்பதாரியின் சான்றிதழ் :
இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் சரியானவை என்றும் உண்மையானவை என்றும் கௌரவத்துடன் குறிப்பிடுகின்றேன். இங்கு ஏதாவதொரு தகவலை பூரணப்படுத்தாமல் அல்லது மற்றும் பிழையாகப் பூரணப்படுத்திய காரணத்தினால் ஏற்படும் நட்டத்தைப் பொறுப்பேற்பதற்கு ஒப்புதல் அளிக்கின்றேன். என்னால் வழங்கப்பட்ட இவ்வுறுதியுரை பொய்யானதென நிரூபிக்கப்பட்டால் நியமனம் பெறுவதற்கு தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமனத்தின் பின்னர் பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் அறிவேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவிதத் தகவலையும் பின்னர் திருத்த மாட்டேன். மேலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்துவது தொடர்பாக விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுவேன் என்பதையும் குறிப்பிடுகின்றேன்.

----,
திகதி :----.    விண்ணப்பதாரியின் கையொப்பம்.

8. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :
இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................ என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் என்றும் அவர் எனது முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும் ரசீதை ஒட்டியுள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

9. திணைக்களத் தலைவரின் சிபாரிசு :
(அரசாங்க/ மாகாண அரசாங்க/ அரசாங்க கூட்டுத்தாபனங்களில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)
இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ......................................... இந்த அமைச்சின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் ......................................... ஆக கடமையாற்றுகின்றார். அவரது விண்ணப்பத்தைச் சிபாரிசு செய்து முன்னிலைப்படுத்துகின்றேன். இந்தப் பதவிக்கு இவர் தெரிவுசெய்யப்படுமிடத்து இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

----,
.
பெயர் :----    நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரையால் அத்தாட்சிப்படுத்தவும்.)
திகதி :----.

2-503

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**காணி அமைச்சு**

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**விலைமனுக்கோரல்**

பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் - 2017

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக்கோரல்கள் 2017.02.23ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனு கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.

**அட்டவணை**

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | கேள்விமனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப்படும் திகதி |
|---|---|---|---|---|---|
| வட மாகாணம் | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | மாகாண நில அளவையாளர் நாயகம் (வட மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகம், வவுனியா | முல்லைத்தீவு நகருக்கு அருகில் | 2017.03.01 |

**பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள் :**

அனைத்துக் கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்றுமதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர்க் குழாய் வசதிகளைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்தவேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான விலை மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்கு பெறுதல் - (இடத்தின் பெயர்)'' எனக் குறிப்பிட்டு 2017.02.23 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
கிருல வீதி, கொழும்பு 05,
2017, சனவரி 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2017**

விலைமனுக்கோரல்- 2017

கட்டிட உரிமையாளர் விபரம் -
1. முழுப்பெயர் :----.
2. முகவரி :----.
3. தொலைபேசி இலக்கம் :----.
4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

கட்டிடம் தொடர்பாக-
1. எந்த பிரதேச நிலஅளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்படவுள்ளது ? :----.
2. மாதாந்த வாடகைத் தொகை :----.
3. தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி :----.
4. உரிய நகரத்திலிருந்து தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ. :----.
5. இடத்தின் விஸ்தீரணம் :----.
6. கட்டிடத்தின் சதுர அடி அளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களும் :----.
7. தனியாக அவதானிக்கக்கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா ? :----.
8. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா ? :----.
9. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில்/கம்பி வேலி/.................... ) :----.
10. நிறுத்திவைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை ? :----.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலைமனு நில அளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

2- 315

## உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது:-
கம்பனியின் பெயர் : சொலூசிஸ் கன்சல்டிங் லங்கா ( பிறைவெட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 101272
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2014.10.02
பதிவு முகவரி : இல. 9/45, 3 ஆம் லேன்,
வுட்லண்ட் அவின்யூ, கொஹுவல, நுகேகொடை
கம்பனியின் பெயர் : அர்பின் கிறீன் வென்சர்ஸ் ( பிறைவெட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 119258
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.01.09
பதிவு முகவரி : இல. 912 ஏ, பஹலவெல வீதி, தலங்கம தெற்கு, பத்தரமுல்லை.

கெஸ்ட்மன் கோப்பரேட் கன்சல்டன்ஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
செயலாளர்.

2- 363

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-
கம்பனியின் பெயர் : கேஸ்வேகன் ( பிறைவெட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 119395
பதிவு முகவரி : இல. 47, அலெக்சாண்ட்ரா பிளேஸ், கொழும்பு 7
பதிவுத் திகதி : 2017.01.16

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
( பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

2- 364

**அறிவித்தல்**

குறித்த இந்த அறிவித்தலானது , 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) இற்கு அமைவாக,கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் பெயரானது 2017, சனவரி மாதம் 06 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் மாற்றப் பட்டுள்ளதை அறியத்தருகின்றது.-
கம்பனியின் முன்னைய பெயர் : டயலொக் டெலிவிஷன் டிரேடிங் ( பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவு இல: பீவீ 2635
கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அமைந்திருக்கும் இடம் : இல.475, யூனியன் பிளேஸ்,கொழும்பு 2
கம்பனியின் புதிய பெயர் : டயலொக் டிவைஸ் ட்ரேடிங் ( பிறைவேட்) லிமிட்டட்

டயலொக் டெலிவிஷன் டிரேடிங்
( பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்.

2- 367

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8(1) A(2) (3) ஆம் பிரிவுகளின் கீழ் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-
கம்பனியின் முன்னைய பெயர் : மெடிமாகட் டிஸ்டிபியுடர்ஸ் (பிறைவெட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 76927
பெயர் மாற்றியமைக்கப்பட்ட திகதி : 2016.09.13
பதிவு முகவரி : இல. 364/4, பொல்ஹேன வீதி, களனிய
கம்பனியின் புதிய பெயர்: ஸ்டீட்பாஸ்ட் ( பிறைவேட்) லிமிட்டட்

சபையின் கட்டளைப் பிரகாரம்,

மைடாஸ் செக்ரடேரியஸ் சர்விசஸ்
( பிறைவேட்) லிமிட்டட்.

2- 375

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் 2017, சனவரி மாதம் 06 ஆந் திகதி கீழ்க் குறிப்பிட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம்:-
கம்பனியின் பெயர் : சீரோடே செக்குயுரிட்டி ( பிறைவெட்) லிமிட்டட்
கம்பனியின் இல. : பீவீ 119232
பதிவு அலுவலகம்: இல. 50, சியபலாகஸ்தென்ன வீதி, கண்டி

எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ் செக்கரட்ரியல்
சேர்விசஸ் ( பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

3 ஆம் மாடி,
இல.11,
காசல் ஒழுங்கை, கொழும்பு 4.

2- 378

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ்வரும் கம்பனியின் பெயர் மாற்றப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் முன்னைய பெயர் : சைனேஜ் வேல்ட் (பிறைவெட்) லிமிட்டட்

கம்பனியின் புதிய பெயர் : சைன்வேல்ட் லங்கா (பிறைவெட்) லிமிட்டட்

பதிவு செய்யப்பட்ட திகதி: 2015. 04.28

பெயர் மாற்றப்பட்ட திகதி: 2016 .12.14

பதிவிலக்கம்: பீவீ 105310

பதிவு முகவரி: இல. 60B 1, ஹோரகந்தர வீதி, தலவத்துகொட

கம்பனிச் செயலாளர்.

2- 381

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் பின்வரும் கம்பனி 2017, சனவரி மாதம் 16 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது:-

கம்பனியின் பெயர் : லொஜிங் பாட்னர் சேர்விசஸ் சிலோன் (பிறைவெட்) லிமிட்டட்

கம்பனியின் இலக்கம் : பீவீ 119389

பதிவு செய்யப்பட்ட முகவரி: இல. 9/5, தம்பையா அவன்யு, கொழும்பு 07

ஜேசீ அன்ட் கம்பனி,
கம்பனிச் செயலாளர்கள்.

இல.9/5,
தம்பையா அவன்யு,
கொழும்பு 07.

2- 415

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கமைய பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது:

கம்பனியின் பெயர் : றெட்ரோ கிரைன்டிங் மில்ஸ் (பிறைவெட்) லிமிட்டட்

கம்பனியின் இல. : பீவீ 108465

திகதி: 2015.09.17

பதிவு அலுவலகம்: இல. 211, பள்ளிவாசல் வீதி, நாபாவெல, அவிசாவளை

சென்ரல் மெனேஜ்மன்ட் கன்சல்டன்.

2- 416

---

### அறிவித்தல்

கே அன்ட் டீ ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனம் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் 2016, சனவரி 06 ஆந் திகதி கூட்டிணைப்புச் செய்யப்பட்டதென இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது. சொல்லப்பட்ட கம்பனியின் பதிவிலக்கம் பீவீ 111054 ஆகும் என்பதோடு அதன் பதிவு செய்த அலுவலகம் இல. 62, கண்டி வீதி, தலுகம, களனி என்ற முகவரியில் அமைந்துள்ளது.

செயலாளர்.

2- 417

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : என் எம் டெக்ஸ்டைல்ஸ் லங்கா (பிறைவெட்) லிமிட்டட்

கம்பனியின் இல. : பீவீ 119423

கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2017.01.17

பதிவு முகவரி: இல. 2/68, பராக்கிரம மாவத்தை, பாணந்துறை

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கம்பனிச் செயலாளர்.

2- 418

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : இடொரா கோபரேஷன் (பிறைவெட்) லிமிட்டட்

கம்பனியின் இல. : பீவீ 96596

கூட்டிணைப்புத் திகதி: 2014.01.21

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: இல. 10, பெரகும் மாவத்தை, அத்திடிய, தெஹிவளை

சார்ட் பிஸ்னஸ் சிஸ்ரம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்.

இல.141/3,
வொக்ஷல் வீதி,
கொழும்பு 02,

2- 456

---

### அறிவித்தல்

எஸ்ஜீஜ லங்கா (பிறைவேட்) லிமிட்டட், கொக்கல மனுபக்ச்சரிங் (பிறைவேட்) லிமிட்டட்,அலயர் அபரல் (பிறைவேட்) லிமிட்டட், பயார்மௌன்ட் பஷன் (பிறைவேட்) லிமிட்டட், பயார்மௌன்ட் அபரல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் லீடிங் லேடி இன்டிமேட்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் என்பவற்றை ஸ்டார் கார்மன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்றினுள் ஒன்று சேர்த்தல்.

("ஒன்றுசேரும் கம்பனிகளான" ) எஸ்ஜீஜ லங்கா (பிறைவேட்) லிமிட்டட் (பீவீ 4350),கொக்கல மனுபக்ச்சரிங் (பிறைவேட்) லிமிட்டட் (பீவீ 4099), அலயர் அபரல் (பிறைவேட்) லிமிட்டட் (பீவீ 15944), பயார்மௌன்ட் பஷன் (பிறைவேட்) லிமிட்டட் (பீவீ 77994), பயார்மௌன்ட் அபரல்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட் (பீவீ 78001) மற்றும் லீடிங் லேடி இன்டிமேட்ஸ் லங்கா ( பிறைவேட்) லிமிட்டட் (பீவீ 66709) அத்துடன் ஸ்டார் கார்மன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (பீவீ 7213) என்பவற்றின் பணிப்பாளர் சபை ஒன்று சேர்க்கையொன்று பயனுறுத்தப்படுமெனத் தீர்மானித்துள்ளது. இதன் மூலம் ஒன்றுசேரும் கம்பனிகள் ஸ்டார் கார்மன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் ஒன்று சேர்க்கப்பட்ட கம்பனியாக நிலைத்திருக்கையில் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 239 ஆம் பிரிவின் நியதிகளின்படி தனியொரு சட்ட உருவகமாக ஸ்டார் கார்மன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டுடன் ஒன்றுசேர்க்கப்படும்.

ஒன்றுசேர்க்கையானது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 241 ஆம் பிரிவிற்கிணங்க 2017, சனவரி 23ஆந் திகதியன்று நடைபெறவுள்ள ஓர் அதிவிசேட பொதுக்கூட்டத்தில் சொல்லப்பட்ட ஒன்றுசேர்க்கை எல்லாக் கம்பனிகளினதும் பங்குதாரர்களினாலும் அங்கீகரிக்கப்படுவதற் கமையவிருக்கும்.

ஒன்றுசேர்க்கை முன்மொழிவு, அங்கீகாரத்துக்காகப் பங்குதாரர்களின் முன்னர் இடப்படுகின்றதுடன், அவ்வாறு அங்கீகரிக்கப்படின் 2017, ஏப்பிறல் 01 ஆந் திகதியன்றுள்ளவாறு அல்லது கம்பனிகள் பதிவாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு பிந்திய திகதியன்று பயனுறும்.

ஒன்றுசேர்க்கை முன்மொழிவின் பிரதிகள், எவரேனும் பங்குதாரரினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன் கொடுநரினால் அல்லது பொதுமக்களினால் வழமையான தொழில் நேரங்களின்போது கொழும்பு 03, யுனிட்டி இடம், இல. 1 அ வில் பார்வைக்குக் கிடைக்கக்கூடியனவாகும் என்பதுடன் ஒன்றுசேர்க்கை முன்மொழிவின் பிரதியொன்று வேண்டுகோளின்மேல் கட்டணமின்றிப் பெற்றுக் கொள்ளவும் படலாம்.

சபையின் கட்டளைப்படி,

எஸ்ஜீஜ லங்கா (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்,
கொக்கல மனுபக்ச்சரிங் (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்,
அலயர் அபரல் (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்,
பயார்மௌன்ட் பஷன் (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்,
பயார்மௌன்ட் அபரல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்,
லீடிங் லேடி இன்டிமேட்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்,
ஸ்டார் கார்மன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ,
கம்பனிச் செயலாளர்.

2- 495

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் , பின்வரும் கம்பனி வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஸொல் லங்கா டுவர்ஸ் (பிறைவெட்) லிமிட்டட்

கம்பனியின் இல. : பீவீ 119385

கூட்டிணைப்புச்சப்பட்ட திகதி: 2017.01.20

பதிவு முகவரி: இல. 346, காலி வீதி, ஹிக்கடுவ.

கம்பனி செயலாளர்கள்.

2-507

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் , பின்வரும் கம்பனி வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : பவர் மெட்டிக்ஸ் (பிறைவெட்) லிமிட்டட்

கம்பனியின் இல. : பீவீ 119456

கூட்டிணைப்புச்சப்பட்ட திகதி: 2017.01.18

பதிவு முகவரி: இல. 458, கண்டி வீதி, களனி.

கம்பனி செயலாளர்கள்.

2-508

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் , பின்வரும் கம்பனியானது கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம் ( உத்தரவாதத்தால் வரையறுக்கப் பட்ட கம்பனி).-

கம்பனியின் பெயர் : "பொசிடிவ் யூத்"

கம்பனி பதிவு இலக்கம் : ஜீஏ 3269

பதிவு செய்யப்பட்ட முகவரி: இல. 277/7, பழைய கண்டி வீதி, தழுகம, களனி

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016, திசெம்பர் 08

பொசிடிவ் யூத்
கம்பனிச் செயலாளர்.

2017, சனவரி 09.

2-522

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் ,பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.-

கம்பனியின் பெயர் : சவி சிங்ஹ பில்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

பதிவிலக்கம் : பீவீ 119566

பதிவு முகவரி இல.: இல. 7, செனவிரத்ன ரோட், ஹெந்தளை, வத்தளை

சபைக் கட்டளைப் பிரகாரம்,
நதீஷானி மல்லவாரச்சி.

2-526

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் 2015, செத்தெம்பர் 08 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்.-

கம்பனியின் முன்னைய பெயர் : சியேரா இன்போமேஷன் டெக்னொலொஜீஸ் (பிறைவேட்) லிமிட்டட்

கம்பனி இலக்கம் : பீபி 241 பீவீ

கம்பனியின் புதிய அலுவலக முகவரி: இல. 112, ஹவலொக் பாதை, கொழும்பு 05

கம்பனியின் புதிய பெயர்: சியேரா டெக்னொலொஜி ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

சபையின் கட்டளைப் பிரகாரம்,

பி.ஆர்.செக்கிரட்டேரியல் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
பணிப்பாளர்.

2-533

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : டஹற பவுண்டேஷன்

பதிவிலக்கம் : ஜீஏ 3280

கூட்டிணைப்புத் திகதி: 2016.12.30

பதிவு முகவரி: இல. 10, அல்பர்ட் கிரஸன்ட், கொழும்பு 7

கம்பனிச் செயலாளர்.

2-546/1

---

### பொது அறிவித்தல்

2017.01.06 ஆம் திகதி, கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியானது கூட்டிணைக்கப்பட்டுள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர் : கிறீன் ஆர்ட் சொலூசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

பதிவிலக்கம் : பீவீ 119240

பதிவு அலுவலகம் : இல. 10, அல்பர்ட் கிரஸன்ட், கொழும்பு 7

கம்பனிச் செயலாளர்.

2-546/2

---

### அற்றோணித்தத்துவப் பத்திரத்தை மீளப் பெறல்

இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது, 2008.05.20 ஆந் திகதியிடப்பட்டு 187 ஆம் இலக்கத்தில் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு றுவானி ஜயவர்த்தன முகதாவில் ரந்தெனிய, கிரிவடுன என்னும் முகவரியைச் சேர்ந்த ஆரச்சி அப்புஹாமிலாகே சனத் பிரேமலால் (தே.அ.அ.இல. 580644430 V) என்பவரின் பெயரில் இல. 35, பனாவெல, நிட்டம்புவைச் சேர்ந்த கந்த ஒழுவாவ பத்திரென்னலாஹே வருண லசந்த ( தே.அ.அ.இல. 721083381 V) ஆகிய என்னால் நிறைவேற்றப்பட்ட அற்றோணித்தத்துவப்பத்திரம் இன்று முதல் மீளப்பெறப்படுவதோடு இரத்தும் செய்யப்படுகின்றது. இன்றுமுதல் அற்றோணித்தத்துவதாரரால் மேற்குறிப்பிட்ட அற்றோணித்தத்துவப்பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

K.P.வருண லசந்த.

2-329

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கொடுகொட, நத்தொழுவ வீடமைப்புத் திட்ட வீதி, இலக்கம் 365/ 2 இல் வசித்து, தற்போது அமெரிக்க ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் ஸ்ரீமதி அனோமா லியனபதிரனகே ஆகிய என்னால் எனது சட்டபூர்வமான பிரதிநிதியாக கொடுகொட, நத்தொழுவ, பொது வீடமைப்புத்திட்ட வீதியில் இலக்கம் 355/2 இல் வசிக்கும் பத்மா ராமநாயக்க என்பவரை நியமித்த ரேணுகா கந்தகே, பிரசித்த நொத்தாரிசு ஆகியவரினால் 1997.06.19 ஆந் திகதி எழுதி உறுதிசெய்யப்பட்ட இலக்கம் 96 ஆம் சட்டபூர்வமான அனுமதிப்பத்திரத்தினால் வழங்கப்பட்ட சட்டபூர்வமாகச் செயல்படும் அதிகாரப்பத்திரத்தை இரத்துச் செய்வதாக இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீமதி அனோமா லியனபதிரனகே.

2- 354

---

### அற்றோணித்தத்துவப் பத்திரத்தை மீளப் பெறல்

இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது, 2016 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 08 ஆந் திகதியிடப்பட்டு தொரன்ரோ,கனடா பரிஸ்டர் சொலிசிட்டர் மாட்டினஸ் இறப்பாயல் மகாராஜா ( martinus Raphael Maharaja) முகதாவில் நிறைவேற்றப்பட்ட விசேட அற்றோணித்தத்துவப் பத்திரமானது, சின்னோயா புலம் வதிரி கரவெட்டி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னத்துரை நடராஜா ( தேசிய அடையாள அட்டை இல. 511150418V) என்பவரின் பெயரில் சின்னோயா புலம் வதிரி கரவெட்டி தற்போது இல. 16, Pin lane Scarborough, Oatario, MIJ 0 A 6 ஐச் சேர்ந்த நாகரத்தினம் சபாரத்தினம் கைம்பெண் சபாரத்தினம் கனகசபை மற்றும் மகன் நவரத்தினராஜா சபாரத்தினம் ஆகிய எம்மால் நிறைவேற்றப்பட்ட அற்றோணித்தத்துவப்பத்திரம் 2017, சனவரி 05 ஆந் திகதி மீளப்பெறுவதோடு இரத்தும் செய்யப்படுகின்றது. இன்று முதல் அற்றோணித்தத்துவக்காரரால் மேற்குறிப்பிட்ட அற்றோணித்தத் துவப் பத்திரத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நாம் பொறுப்பாக மாட்டோம்.

நாகரத்தினம் சபாரத்தினம் கைம்பெண்
சபாரத்தினம் கனகசபை
மற்றும் மகன் நவரத்தினராஜா சபாரத்தினம்.

2017, சனவரி 05

2- 528

---

## ஏல விற்பனைகள்

**டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ**

(முன்னர் டீஎப்சீசீ வங்கி என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை

பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை

**39/1634/43 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடமையின் விபரம்**

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்கு உட்பட்ட, கிரான்பாஸ் தெற்கு, 14 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள இல. 39, கெத்தாராம மாவத்தை எனும் முகவரியைக் கொண்ட அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் எஸ். ராசப்பா அவர்களால் அண்மையில் வரையப்பட்ட , 2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதியிடப்பட்ட 485/ 2009 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3A எனக் குறிப்பிடப்பட்டுள்ள (முன்னர் 1850 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணி) பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.**

**காணியின் விஸ்தீரணம் 0ஏ. 0றூ.4.92 பே. அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக.**

முறையே கொழும்பு பிரசித்த நொத்தாரிசு சஜினி பஸ்நாயக்க, கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஆன் எஸ். கனேகொட மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு சஜினி பஸ்நாயக்க ஆகியோரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆந் திகதி , 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி மற்றும் 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந்

திகதியிடப்பட்ட 38/ 1633/ 42 மற்றும் 39/1634/ 43 ஆம் இலக்க உடன்பாட்டுப் பிணை உறுதிகள் மூலம் கொழும்பு 14, ஈட் மோர் ரெஸ்ட்ரூரன்ட் எனும் பெயரில் பங்குடமைத்துவத்துடன் வியாபாரத்தைக் நடத்தி வரும், கொழும்பு 14 இல் வசிக்கும் மொஹமட் சிருக் மொஹம்மட் பகுர்தீன் மற்றும் பாத்திமா ருஸானா பகுர்தீன் எனவும் பாத்திமா ருஸானா ஆரிப் எனவும் பளீல் ஆரிப் பாத்துமா ருஸ ானா ஆகியோரால் டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ க்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.

டிஎப்சீசீ வங்கி பீஎல்சீயினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி, 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு 74,000 ரூபா ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 011-2371371 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கி பீஎல்சியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.'

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்,
125 வருடகால மகோன்னத சேவை.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும்: |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011- 2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்னஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

2- 441

---

**கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ ( பசறை கிளை) மூலம் பகிரங்க ஏல விற்பனை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்களினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்புச் சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ ( பதிவு இலக்கம் PQ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்

**ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், மொனராகலை கிராம அலுவலர்பிரிவில் புத்தல மாவட்ட செயலாளர் பிரிவில் புத்தல வெடிரட்ட கோரளையில் மொனராகல பிரதேச சபை பிரிவில் மூப்பண்ண கிராமத்தில் உள்ள எலயன் வெலவத்த காணியின் நிலஅளவையாளர் பி.பி. இலயசிங்கவின் 2006.06.04 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1334 இல் காண்பிக்கப்பட்ட லொட் 1.**

**இக் காணியின் விஸ்தீரணம் 0ஏ. 1றூ. 37.8 பே.**

**இக்காணியில் அமைந்துள்ள எல்லாம் சேர்த்து**

கடன் எடுத்த ஹேரத் முதியன்சலாகே நியால் ஹேரத் மேற்படி காணியை கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடு வைத்துள்ளார்.

மேற் சொல்லப்பட்ட காணியை 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 10ஆந் திகதி பி.ப. 1.00 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக** :- 2016.12.16 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2016.12.20 ஆந் திகதியுடைய லக்பிம, த ஐலன்ட் மற்றும் வீரகேசரி பத்திரிகைகளையும், ஏல விற்பனை விளம்பரத்துக்காக 2017.02.09 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2017.02.09 ஆந் திகதியுடைய லக்பிம, த ஐலன்ட் மற்றும் வீரகேசரி ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்**:- மொனராகலை நகரத்திலிருந்து பொத்துவில் ரோட்டில் 75 மீற்றர் சென்று வலதுபக்கம் உள்ள வாகனங்கள் செல்லும் ரோட்டில் சந்தை வரை சென்று இங்கிருந்து இன்னும் 250 மீற்றர் சென்று இடது பக்கம் ஆதனம் உள்ளது.

**கட்டணம் செலுத்தும் விதம்.**- உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;
(7) VAT வரி.

கொள்வனவு விலையின் மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகத்தில் அல்லது பசறைக் கிளையில் செலுத்த வேண்டும்.

**வேறு விபரங்களுக்காக** .- முகாமையாளர், (அறவிடல்), கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல.278/280, பிரதான ரோட், பசறை.
தொலைபேசி இல. : 055- 2288007.
தொலைநகல் இல. : 055-2288008.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,
2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/தொலைநகல் இல. 011-2445393.

2- 442

---

**நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் ஏல விற்பனை பற்றிய அறிவித்தல்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் மஹரகம நகர சபை எல்லைக்குள் ( மஹரகம பிரதேச செயலாளரின் அதிகாரப் பிரதேசத்தில் இல. 528 அ உடைய தம்பஹேன கிராம அலுவலர் பிரிவில்) சல்பிட்டி கோரளையில் பல்லேபத்துவில் பன்னிப்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள தல்கஹலன்தேவத்த என்ற பெயருடைய காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ்.ஏ. டபிள்யூ. பெரேராவால் அளவையிட்டுத் தயாரிக்கப்பட்ட இலக்கம் 648 மற்றும் 2003.06.03 ஐ உடைய படவரைபுத் திட்டத்திற்கேற்ப பிரித்து வேறாக்கப்பட்ட காணித்துண்டு 1. இலக்கமுடைய காணிப் பகுதி.

பரப்பளவு ( 0ஏ.0றூ.16.90 பேர்.) பதினாறு தசம் ஒன்பது பூச்சியம் பேர்ச் பரப்பளவுடைய காணித்துண்டு மற்றும் மரங்கள், பயிர்கள் மற்றும் அதிலுள்ள ஏனைய அனைத்துடனும் சேர்த்து.

மேலும் கூறப்பட்ட காணி கீழே விபரிக்கப்பட்ட காணியிலுள்ள பாதைக்கான உரிமையுடனும் சேர்ந்தது.

மேற்கூறப்பட்ட பன்னிப்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள தல்கஹலன்தேவத்த என்ற பெயருடைய காணி சம்பந்தமாக உத்தரவு பெற்ற நில அளவையாளர் டீ.ஜே.நாணயக்காரவால் அளவையிட்டுத் தயாரிக்கப்பட்ட இலக்கம் 1429 மற்றும் 1969.06.20 ஆந் திகதியுடைய படவரைபுத் திட்டத்துக்கு ஏற்ப பிரித்து வேறாக்கப்பட்ட காணித்துண்டு இலக்கம் அ ஆகிய காணிப்பகுதி.

பரப்பளவு ( 0ஏ.0றூ.31 பேர்.) முப்பத்தொரு பேர்ச் பரப்பளவுடைய காணித்துண்டு .

பிரசித்த நொத்தாரிசு இஷாரா திலுமினி வீரக்கொடியால் உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 2421 மற்றும் 2015.01.02 ஆந் திகதியுடைய ஈட்டுமுறிக்கேற்ப தஹநாயக்க வியனகே நிஹால் சமன் ஆகிய நபர் கொழும்பு 02, யூனியன் பிளேஸ், இல. 242 என்ற முகவரியில் அமைந்துள்ள நேஷன் ட்ரஸ்ட் பேங்க் பீஎல்சீ யில் பெற்றுக்கொண்ட நிதி வசதிகளுக்கான பிணையாக மேற்படி அட்டவணையில் விபரமாகக் காட்டப்பட்ட உரிமைகள் ஆதனம் மற்றும் வளவுகளை கடப்பாடு உடையவர் என்ற வகையில் வங்கியின் பெயரில் ஈடு வைத்துள்ளதுடன் கூறப்பட்ட கடன் பெற்றவர் ஈட்டு முறிமூலம் பெற்றுக்கொண்ட வசதிகளுக்குரிய கொடுப்பனவைச் செலுத்தத் தவறிவிட்டார்.

நேஷன் ட்ரஸ்ட் பேங்க் பீ எல்சீ யால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு ஏற்ப மேற்கூறப்பட்ட ஆதனத்தை அதே இடத்தில் பகிரங்க ஏல விற்பனை மூலம் நாம் விற்பனை செய்யவுள்ளோம்.

ஏல விற்பனை 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும்.

**ஆதனத்தை வந்தடைதல்**:- கொழும்பிலிருந்து ஹைலெவல் வீதிவழியாக மஹரகமவுக்கு பயணம் செய்து இடது பக்கமுள்ள வீதியில் திரும்பவும் பின்னர் பன்னசல வீதியில் சுமார் 650 மீற்றர்கள் சென்று வலது பக்கமுள்ள ரணவிரு அத்துல மாவத்தைக்குத் திரும்பி அதில் சுமார் 60 மீற்றர்கள் சென்று இடது பக்கம் அமைந்துள்ள சம்பந்தப்பட்ட ஆதனத்தை வந்தடையலாம்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கமாகச் செலுத்த வேண்டும்.

(1) முடிவுசெய்யப்பட்ட விற்பனை விலையின் பத்து (10%) சதவீதம் ;
(2) விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மீதி (90%) நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் தலைமை அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும் ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் இரண்டரை சதவீதம் (2.5%);
(4) உள்ளூராட்சி சபைகளுக்கு விற்பனை வரியாக கொள் வனவு விலையின் ஒரு (1%) சதவீதம் செலுத்தப்படல் வேண்டும் ;
(5) விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு அறவீடுகள் 100% ;
(6) இலிகிதர், முரசறைவோர் கூலியாக 1,000 ரூபா ;
(7) நொத்தாரிசுக் கட்டணம் உட்பட ஏனைய கட்டணங்கள் 2,000 ரூபா.

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியுடன் தொடர்புகொண்டு பெற முடியும் .

சட்டப் பிரிவு, நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ, இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2; தொலைபேசி இல. 011-4218745.

திரிவன்கா மற்றும் சேனாநாயக்க,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்கள்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம்,
கொழும்பு மாவட்ட நீதிமன்றம், அரச மற்றும்
வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான நீதிமன்ற
ஆணையாளர்.

இல. 200,
ஹல்ஸ்ரொப் வீதி, கொழும்பு 12.
தொலைபேசி இல. 077-3181891.

2-443

---

**நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் ஏல விற்பனை பற்றிய அறிவித்தல்

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில் தேவமெதி ஹத்பத்துவில் உடுகஹகோரளையில் வீரம்புகல பிரதேச செயலாளரின் அதிகாரப் பிரதேசத்தில் பொல்கஹவெல பிரதேச சபை எல்லைக்குள் 871 ஐ உடைய வடக்கு மடவல கிராம அலுவலர் பிரிவில் மடவல கிராமத்தில் அமைந்துள்ள மடவல எஸ்டேற் என்ற பெயருடைய காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ்.எம். திசாநாயக்கவினால் அளவையிட்டுத் தயாரிக்கப்பட்ட இலக்கம் 3209 மற்றும் 2010.07.25 ஆந் திகதியுடைய படவரைபுத் திட்டத்திற்கு ஏற்ப பிரித்து வேறாக்கப்பட்ட காணித்துண்டு இலக்கம் 1 ஐ உடைய காணிப்பகுதி ( உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ்.எம்.திசா நாயக்கவினால் மடவல எஸ்ரேற் என்ற பெயருடைய காணிக்கு அளவையிட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் 2108 ஏ மற்றும் 2001.02.10ஆந் திகதியுடைய படவரைபுத் திட்டத்தில் காட்டப்பட்ட காணித்துண்டு இலக்கம் 1 மற்றும் 5 ஐ உடைய காணியின் ஒன்றிணைப்பாக) உள்ளது.

முப்பது பேர்ச் (0ஏ.0றூ.30 பேர்.) விஸ்தீரணமுடைய காணித்துண்டு. இந்தக் காணி குருநாகல் காணிப்பதிவகத்தில் V01/111 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரசித்த நொத்தாரிசு பனாவலக நிலந்தி பானடெத்தால் உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 10489 மற்றும் 2014.08.19 ஆந் திகதியுடைய ஈட்டுமுறிக்கேற்ப அபேசிங்க முதியன்சேலாகே ஜயந்த அபேசிங்க ஆகிய நபர் கொழும்பு 02, யூனியன் பிளேஸ், இல. 242 என்ற முகவரியில் அமைந்துள்ள நேஷன் ட்ரஸ்ட் பேங்க் பீஎல்சீ யில் பெற்றுக்கொண்ட நிதி வசதிகளுக்கான பிணையாக மேற்படி அட்டவணையில் விபரமாகக் காட்டப்பட்ட உரிமைகள் ஆதனம் மற்றும் வளவுகளை கடப்பாடு உடையவர் என்ற வகையில் வங்கியின் பெயரில் ஈடு வைத்துள்ளதுடன் கூறப்பட்ட கடன் பெற்றவர் ஈட்டு முறிமூலம் பெற்றுக்கொண்ட வசதிகளுக்குரிய கொடுப்பனவைச் செலுத்தத் தவறிவிட்டார்.

நேஷன் ட்ரஸ்ட் பேங்க் பீ எல்சீ இனால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு ஏற்ப மேற்கூறப்பட்ட ஆதனத்தை அதே இடத்தில் பகிரங்க ஏல விற்பனை மூலம் நாம் விற்பனை செய்யவுள்ளோம்.

ஏல விற்பனை 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு நடைபெறும்.

**ஆதனத்தை வந்தடைதல்**:- குருநாகல் நகரத்திலிருந்து நீர்கொழும்பு வீதி வழியாக சுமார் 8.7 கிலோ மீற்றர்கள் பயணம் செய்து கொட்டகஸ்பிட்டிய சந்தியில் வலது பக்கம் கீனகஸ் பிட்டிய வீதியில் திரும்பி சுமார் 1.4 கிலோ மீற்றர்கள் பயணம் செய்து இடது பக்கத்தில் அமைந்துள்ள சம்பந்தப்பட்ட ஆதனத்தை வந்தடையலாம்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கமாகச் செலுத்த வேண்டும்.

(1) முடிவுசெய்யப்பட்ட விற்பனை விலையின் பத்து (10%) சதவீதம் ;
(2) ஏல விற்பனையாளர் கட்டணம் இரண்டரை சதவீதம் (2.5%);
(3) உள்ளூராட்சி சபைகளுக்கு விற்பனை வரியாக கொள் வனவு விலையின் ஒரு (1%) சதவீதம் செலுத்தப்படல் வேண்டும் ;
(4) விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு அறவீடுகள் 100% ;
(5) இலிகிதர், முரசறைவோர் கூலியாக 1,000 ரூபா ;
(6) நொத்தாரிசுக் கட்டணம் உட்பட ஏனைய கட்டணங்கள் 2,000 ரூபா.

விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மீதி (90%) நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் தலைமை அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும். உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியுடன் தொடர்புகொண்டு பெற முடியும் .

சட்டப் பிரிவு, நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ, இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2; தொலைபேசி இல. 011-4218743.

திரிவன்கா மற்றும் சேனாநாயக்க,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்கள்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம்,
கொழும்பு மாவட்ட நீதிமன்றம், அரச மற்றும்
வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான நீதிமன்ற
ஆணையாளர்.

இல. 200,
ஹல்ஸ்ரொப் வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. 077-3181891.

2-444

---

**குறிப்பு.**- மேற்படி தலைப்பின் கீழான மேலதிக அறிவித்தல்களை தயவுசெய்து 2017.02.09 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

---

# பகுதி I : தொகுதி (I) - பொது

அறிவித்தல்களை தயவுசெய்து 2017.02.09 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனியினால் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.
www.documents.gov.lk